**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Civil Procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO. O.S.150/2022**
**Deposition of witness for Plaintiff - P.W.1**
**07.09.2022**

| | | |
|---|---|---|
| **Name** | : | சுப்பிரமணியன் |
| **Father Name** | : | ராமசாமி |
| **Village** | : | புதுக்கோட்டை |
| **Taluk** | : | |
| **Age** | : | 57 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 7th day of September 2022.

**சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணையை எழுத்துமூல பிரமாண பத்திரமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன்.

25.06.2019 ம் தேதியிட்ட பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த காசோலையின் அசல் வா.சா.ஆ.1

25.06.2019 ம் தேதியிட்ட பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த ரூ.1 லட்டசத்திற்கான காசோலை அசல் வா.சா.ஆ-2

07.09.2019 ம் தேதியிட்ட பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த ரூ.95 ஆயிரத்திற்கான காசோலை அசல் வா.சா.ஆ-3

29.07.2019, 07.09.2019 ஆகிய தேதிகளில் மேற்படி காசோலைகளை நான் வங்கியில் வசூலுக்கு போட்டதற்கான சலான் அசல் 3 எண்ணிக்கை முறையே வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ-5 ஆகும்.

27.09.2019 நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.6

01.10.2019 தேதியிட்ட மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ-7

10.10.2019 மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பின் அசல் வா.சா.ஆ-8

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.